# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.61/2020 நாள். 14.07.2020

## தனி அலுவலர் அவர்களின் ஜூலை 2020 மாதம் சிறப்பு கூட்டப்பொருள்

14.7.2020ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சிறப்பு கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைபு திட்டம் 2020–21 திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028 அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள். 14.07.2020ன்படி மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 கோடிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்காணும் நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு நகர்மன்ற தீர்மானம் இயற்றி அதனை நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சி / மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| அனகாபுத்தூர் | 3.00 | 2.25 | 0.75 |

மேற்படி நிதி ஒதுக்கீட்டிற்கு கீழ்கண்ட சாலைகள் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்ட பழுதான சாலைகளை சீரமைக்க வேண்டி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | நீளம் (கீ.மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 2, 4, 5, 9, 16 (ம) 17 | **சிப்பம்–1**<br>வார்டு எண்.4 – குருசாமி நகர் 4வது, 1வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – சுப்ரமணிய பாரதி தெரு, வார்டு எண்.9 – தியாகராய முதலி தெரு, வார்டு எண்.16 – சீனிவாசபுரம் 2வது மெயின் ரோடு, வார்டு எண்.17 – கன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.2 – கருணாநிதி நகர் 3வது குறுக்கு தெரு, வார்டு எண்.5 – பாலாஜி நகர் 12வது தெரு, பாலாஜி நகர் 3வது மெயின் ரோடு, வார்டு எண்.17 – பாரி நகர் வாசுகி தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 1.895 | 140.00 |
| 2. | 2, 4, 5, 7, 10 (ம) 13 | **சிப்பம்–2**<br>வார்டு எண்.2 – பம்ப் அவுஸ் ரோடு, வார்டு எண்.4 – வெங்கடேஸ்வரா நகர் திருவள்ளுவர் தெரு, வார்டு | 2.171 | 160.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எண்.10 – யாதவாள் தெரு, வார்டு எண்.13 – வ.உ.சி தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.5 – பாலாஜி நகர் 15வது தெரு, திருநகர் அண்ணா தெரு, வார்டு எண்.7 – அண்ணா நகர் 2வது குறுக்கு தெரு, அண்ணா நகர் 4வது தெரு, அண்ணா நகர் 8வது தெரு மற்றும் வார்டு எண்.4 கண்ணகி தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | | |
| | | **மொத்தம்** | **4.066** | **300.00** |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21-ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறவும், நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சியின் பங்களிப்பு தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி